விலை ரூ.10/=


# ஈழநாடு
வடக்கின் முதலாவது நாளிதழ்
Eelanadu
15.07.2020 புதன்கிழமை

## சிறிதரனுக்கு எதிராக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

கிளிநொச்சி, ஜூலை 15

“75 கள்ள வாக்குகள் போட்டேன்” என்று அண்மையில் இணையத்தளம் ஒன்றின் நேர்காணலில் கூறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட முன்னாள் எம்.பியும், தற்போதைய வேட்பாளருமான சி.சிறிதரனுக்கு எதிராக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

02














# 75 கள்ள வாக்கு; சட்ட நடவடிக்கை?

## யாழ்.வந்த மஹிந்த தேசப்பிரிய ஊடகங்களுக்குத் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 15

‘‘75 கள்ள வாக்குகள் போட்டேன்’’ என்று பகிரங்கமாகக் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர் சி.சிறிதரனுக்கு எதிராக சட்ட நடவடிக்கைக்கு தயாராகி வருவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

02



## தேர்தல் பணியில் இராணுவத்தை அனுமதியோம்!

மஹிந்த தேசப்பிரிய திட்டவட்டம்



யாழ்ப்பாணம், ஜூலை 15

தேர்தல் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படமாட்டார்கள் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய, தெரிவித்துள்ளார்.

வடக்கிற்கு பயணம் மேற்கொண்

02

## ஓகஸ்ட் 5க்கு முன்னரே தேர்தலை நடத்துங்கள்

கோருகிறார் தயாசிறி ஜயசேகர

கொழும்பு, ஜூலை 15

ஓகஸ்ட் 5ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்துமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர கோரிக்கை விடுத்தார்.

18ஆம், 19 ஆம் திகதிகளில் தபால் மூல வாக்களிப்பு நிறைவுபெறுமாக இருந்தால் 25 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்துமாறு அவர்

02

## இலங்கையில் கொரோனா சமூகப் பரவலாகும் நிலை!

மருத்துவ நிபுணர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 15

கொரோனா தொற்று தொடர்ந்தும் உலகத்தொற்றாக பரவியுள்ளதால், அது சமூகப் பரவல் வரை விருத்தியடையும் நிலை தென்படுவதாக விசேட மருத்துவ

02

## வவுனியா விபத்தில் முதியவர் மரணம்!

வவுனியா, ஜூலை 15

வவுனியா - கனகராயன் குளம் குறிசுட்ட குளம் சந்தியில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

02

## வலுவான அணுகுமுறை இலங்கை மீது அவசியம்

7 மனித உரிமை அமைப்புக்கள் ஐ.நாவிடம் கூட்டாக வலியுறுத்து

“இலங்கையில் பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படுவதைக் கண்காணிக்க வேண்டிய கடப்பாடு ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு உண்டு. இது தொடர்பில் அந்நாட்டின் மீது வலுவான அணுகுமுறைகளைப் பின்பற்றுவது அவசிமாகிறது. அத்துடன், விசேட ஆணையாளர் தொடர்ந்தும் இலங்கையின் மனித உரிமைகள் விவகாரத்தை தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும்.”

- இவ்வாறு, 7 சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் அறிக்கை மூலம் கூட்டாகக்

02

## கொரோனா தொற்றிலிருந்து நாட்டு மக்களைக் காப்பேன்



ஜனாதிபதி கோட்டா வாக்குறுதி

கொழும்பு, ஜூலை 15

நாட்டில் கொரோனா தொற்று பரவும் அபாயத்தைக் கட்டுப்படுத்தி மக்களைப் பாதுகாக்கும் சவாலை வெற்றி கொள்வதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொரோனா ஒழிப்பு ஜனாதிபதி செயலணி உறுப்பினர்களை நேற்று சந்தித்துக்

02

## கொரோனா நிலவர அறிக்கை

| தொற்றாளர் | புதிய தொற்றாளர் | சிகிச்சை பெறுவோர் | சந்தேகநபர்கள் | குணமடைந்தோர் |
|---|---|---|---|---|
| 2,663 | 17 | 664 | 120 | 1,988 |

இறப்பு 11

மூலம் : சுகாதார மேம்பாட்டு பணியகம்

## வலுவான...

கோரியுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கவுன்ஸிலின் 44 ஆவது கூட்டத் தொடரில் “அமைதியான முறையில் சுதந்திரமாகக் கூடுவதற்கும், கலந்துரையாடுவதற்குமான உரிமை“ பற்றி ஐ.நா. விசேட அறிக்கையாளர் அறிக்கை சமர்ப்பித்திருந்தார்.

இந்த அறிக்கையில் கூறப்பட்ட விடயங்கள் தொடர்பில் சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம், சிறுபான்மை இன சமூகங்களின் உரிமைகளுக்கான சர்வதேசக்குழு, மனித உரிமைகளுக்கான சர்வதேச சேவைகள் உள்ளிட்ட 7 அமைப்புக்கள் கூட்டாக வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்படி விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் அந்தக் கூட்டறிக்கையில்,

சிவில் சமூக அமைப்புக்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் இராணுவத்தினரின் தீவிர கண்காணிப்புக்கு உள்ளாகியுள்ளனர். அவர்கள் விசாரணைகளுக்கும் உட்படுத்தப்படுகின்றனர்.

தற்போது பரவும் கொவிட் 19 தொற்று அபாயத்தை சாட்டாக வைத்து கருத்துச் சுதந்திரம், அமைதியான முறையில் கூடுவதற்கான சுதந்திரம் என்பற்றுக்கு அரசாங்கம் கட்டுப்பாடுகளை பிரயோகிக்கிறது.

இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் அரசாங்கத்தால் பல்வேறு ஜனாதிபதி செயலணிகள் நிறுவப்பட்டுள்ளன. ஆனால், இவை பாராளுமன்றத்தின் மேற்பார்வையோ, அனுமதியோ இன்றி மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த செயலணிகளில் இராணுவத்தினரே அதிகம் உள்ளடக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக ‘பாதுகாப்பானதும், ஒழுக்கமானதுமான நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதி செயலணி’ முழுமையாக பாதுகாப்புத் தரப்பினரை உள்ளடக்கியுள்ளது. இது மக்கள் மீது இராணுவ அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தலாம்.

அமைதியான போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் மீது கட்டற்ற அடக்குமுறை பிரயோகிக்கப்படுகின்றது. இலங்கையின் சிவில் சமூக மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் பகிரங்கமாக கருத்து வெளியிடக்கூடிய ஒரே தளம் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில். ஆனால், இங்கு பேசுபவர்களுக்கு எதிராக அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளன - அதிகரிக்கும் நிலை காணப்படுகின்றது.

## 75 கள்ள...

எதிர்வரும் ஓகஸ்ட் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் நிலைமைகளை ஆராய்வதற்காக மஹிந்த தேசப்பிரிய நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

இதன்போது ஊடகவியலாளர்களையும் சந்தித்துப் பேசினார். அவரிடம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் அண்மையில் ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலில், “2004 ஆம் ஆண்டு தேர்தலில் நான் ஒருவனே 75 வாக்குகளைப் போட்டேன்”, என்று கூறியிருந்தார். அது தொடர்பில் என்ன நடவடிக்கை எடுப்பீர்கள் என்று கேட்கப்பட்டது.

இதற்குப் பதிலளத்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், “இது தொடர்பில் எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளது. அது தொடர்பில் ஆணைக்குழுவில் பரிசீலித்து வருகின்றோம் அதற்குரிய உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.”, - என்று கூறினார்.

எனவே இலங்கையில் பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படுவதைக் கண்காணிக்க வேண்டிய கடப்பாடு மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு உண்டு. இலங்கை தொடர்பில் இன்னும் வலுவான அணுகுமுறைகளைப் பின்பற்றுவது அவசியமாகின்றது. மேலும் தொடர்ந்தும் விசேட ஆணையாளர் இலங்கையின் மனித உரிமைகள் விவகாரங்களைக் கண்காணிக்க வேண்டும் - என்று கேட்கப்பட்டுள்ளது.

## வவுனியா...

மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன் தினம் இரவு மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த முதியவர் ஏ-9 வீதி குறிசுட்ட குளம் சந்தியில் சென்றுகொண்டிருந்தபோது எதிரே வந்த சைக்கிளுடன் மோதியதில் விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் புதூர் சந்தியைச் சேர்ந்த ஞானசேகரம் (வயது 53) என்ற முதியவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்தார். அத்துடன், சைக்கிளில் பயணித்த நபர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கனகராயன்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## தேர்தல்...

டுள்ள தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய, யாழ். மாவட்ட செயலகத்துக்கு நேற்றுச் சென்றிருந்தார். இதன்போது, உதவித் தேர்தல் திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடியதுடன், அரச அதிபர், மேலதிக அரச அதிபர்கள் மற்றும் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் உள்ளிட்ட அதிகாரிகளைச் சந்தித்தார்.

பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிடும் போது வடக்கில் சில தேர்தல் விதிமுறை மீறல்கள் அதிகமாக இடம்பெறுவதை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. வீதிகளில் வேட்பாளர்களின் இலக்கங்கள் மற்றும் சின்னங்கள் எழுதப்படுவது இங்கே அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

தனிமைப்படுத்தலில் உள்ளவர்கள் வாக்களிப்பதற்கு தொடர்பாக நாம் ஆணைக்குழுவில் ஆராய்ந்து வருகின்றோம். அது தொடர்பில் விரைவில் அந்த அறிவித்தல் வரும்.

வீடுகளில் சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு உள்ளவர்கள் தேர்தல் தினத்தன்று மாலை 4 தொடக்கம் 5 மணி வரை வாக்களிப்பு நிலையம் சென்று வாக்களிப்பை மேற்கொள்ள முடியும்.

தேர்தல் கடமைகளில் பொலிஸார் மாத்திரமே ஈடுபடுத்தப்படுவார்கள். இராணுவத்தினர் எக்காரணத்திற்காகவும் கடமையில் ஈடுபடுத்தப்பட மாட்டார்கள்.

தீவுப் பகுதிகளில் இருந்து விரைவாக வாக்குப் பெட்டிகளை வாக்குச் சேகரிப்பு நிலையத்துக்கு எடுத்து வருவதற்கு விமானப்படை மற்றும் கடற்படையினரின் உதவி தேவையாக உள்ளது.

எனவே வாக்குப் பெட்டிகள் வாக்கெண்ணும் நிலையத்துக்கு எடுக்கும் பணியில் மட்டும் இராணுவத்தினர் பயன்படுத்தபடுவார்கள்.

அத்தோடு தேர்தல் விதிமுறை மீறல் தொடர்பில் ஒருவரை கைது செய்யும் அதிகாரம் பொலிஸாருக்கு மாத்திரமே உள்ளது. அதனை வேறு எவரும் மேற்கொள்ள முடியாது-என்றார்.

# கொரோனா தொற்றாளர்களுக்கு புதிய அறிகுறிகள் தென்படுகின்றன

கொரோனா வைரஸ் தொற்றின் வெளிப்பாடுகள் குறித்து உலக சுகாதார சுகாதார ஸ்தாபனம் வெளியிட்ட அறிகுறிகளுடன் தற்போது புதிய அறிகுறிகள் தென்படுகின்றன. கொரோனா வைரஸ் உருமாற்றம் அடைந்தமையாலேயே இந்த அறிகுறிகள் தோன்றுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


இது குறித்து அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள தகவல் வருமாறு,

இலங்கையில் கொரோனா தொற்றாளர்களிடையே வைரஸ் உருமாற்றம் அடைந்தமையால், கெண்டைக்கால் வலி, வயிற்றுவலி ஆகியவை தென்படுகின்றன. இதனுடன், முதுகுவலி, குமட்டல், சருமத்தில் தடிப்புகள் ஆகியவையும் கூறப்படுகின்றன.

முன்னர் சளி, இருமல், காய்ச்சல் மட்டுமே கொரோனாவின் அறிகுறிகள் எனச் சொல்லப்பட்டன.

மேலும், வயிற்றுப்போக்கும், நீரிழிவுநோய் இல்லாதவர்களுக்குக்கூட கொரோனா தொற்றால் சர்க்கரையின் அளவானது 400 ஐ கடந்து விடுகிறது. இதையடுத்து அமெரிக்காவின் நோய்க் கட்டுப்பாட்டு அமைப்பு (CDC) கொரோனா அறிகுறிகளாகப் புதிதாக மூன்றைச் சேர்த்து அறிவித்துள்ளது.

அவை முறையே மூக்கு ஒழுகுதல், குமட்டல் தன்மை மற்றும் வயிற்றுப்போக்கு. இதேபோல் ஐ.சி. எம்.ஆர். அமைப்பும் வாசனை அல்லது சுவை தெரியாமல் இருப்பதையும்



அறிகுறியாகச் சேர்த்துள்ளது.

பொதுவாக, கொரோனா அறிகுறிகளாகக் காய்ச்சல், சோர்வு, வறட்டு இருமல் ஆகியவை இருக்கும். இதனுடன் சில நோயாளிகளுக்கு உடல்வலி, மூக்கடைப்பு, மூக்கு ஒழுகுதல், தொண்டைக் கரகரப்பு மற்றும் வயிற்றுப்போக்கு ஆகியவையும் அறிகுறிகளாகத் தென்படுகின்றன என்று ஐ.சி.எம்.ஆர். அமைப்பு தெரிவித்துள்ளது.

வயிற்றுப்போக்கு மற்றும் உடல்வலி ஆகிய அறிகுறிகளுடன் வரும் நோயாளிகளிடம் கொரோனா தொற்றைக் கண்டுபிடித்துள்ளோம். சாதாரண காய்ச்சல் கூட தற்போது கொரோனா தொற்றாக மாறிவிடுகிறது.

கிராண்ட் மெடிக்கல் கொலிஜின் (Grand Medical College) மருத்துவர் ஹேமந்த் குப்தா கூறுகையில், சீனியின் அளவு அதிகமாவது கூட கொரோனா தொற்றால் ஏற்படுகிறது. இதனால் அதிக அளவிலான இன்சுலினையும் அவர்களுக்குச் செலுத்த வேண்டியதாக உள்ளது - என்றார்.

## இலங்கையில்...

நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலைமை அவசர நிலையாக மாற்றமடைந்தால், நாட்டின் சுகாதார வசதிகளைக் கருத்திற்கொள்கையில், அது பாரதூரமான நிலைமையை ஏற்படுத்தக்கூடும் என விசேட மருத்துவ நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் எல்.ஏ.ரணசிங்க வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் தாமதப்படுத்தாமல், இந்த நிலைமையை அதிகரிப்பதைத் தடுப்பதற்குத் தேவையான வரையறைகளை விதிக்குமாறு சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

மக்கள் ஒன்றுகூடும் அரசியல் கூட்டங்களை நடத்துதல், வகுப்புக்களை நடத்துதல் மற்றும் பாடசாலைகளை மீளத் திறத்தல் தொடர்பில் மீளாய்வு செய்யுமாறும் விசேட மருத்துவ நிபுணர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

பொதுப்போக்குவரத்து சேவை தொடர்பில் சுகாதார வரையறைகளை மீண்டும் பிறப்பிக்கவேண்டியதன் தேவை குறித்தும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சமூகத்தில் எழுமாற்றாக தெரிவு செய்து பரிசோதனை நடத்துவதுடன், பி.சி.ஆர் பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டியது அத்தியாவசியமானது எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, தற்போது நாட்டில் முன்னெடுக்கப்படும் பரிசோதனைகளின் எண்ணிக்கை போதுமானதல்ல என அரச மருத்துவ அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

மாதமொன்றில் குறைந்தபட்சம் 68 ஆயிரம் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என சுட்டிக்காட்டும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், அதற்காக நாள்தோறும் 2,500 பரிசோதனைகளேனும் முன்னெடுக்கப்படவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

## கொரோனா...

கலந்துரையாடியபோது ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் கொரோனா தொற்றுக்குள்ளானோர் உறுதி செய்யப்பட்டதை அடுத்து ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதி நேற்று இந்தக் கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

கொரோனா தொற்றுக்குள்ளானோர் அடையாளம் காணப்பட்ட இராஜாங்கனை உள்ளிட்ட ஏனைய பகுதிகளில் பி.சி.ஆர் பரிசோதனைகளை அதிகரிக்குமாறு ஜனாதிபதி இதன்போது அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

## சிறிதரனுக்கு...

சட்டத்தரணியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளருமான ஸ்ரனிஸ்லாஸ் செலஸ்ரினே இந்த முறைப்பாட்டையும் பதிவு செய்துள்ளார்.

கள்ள வாக்குகள் போட்ட குற்றத்தை பகிரங்கமாகக் ஒப்புக்கொண்ட சிறிதரனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கடந்த, ஜூலை முதலாம் திகதி யாழ். மாவட்ட செயலகத்திலும் செலஸ்ரின் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஓகஸ்ட் 5க்கு...

குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தொடர்ந்தும் பிரச்னை அதிகரிக்கின்றது. நாம் கூட்டங்களுக்குச் செல்கின்றோம். மக்கள் கூட்டங்களுக்கு வருகின்றனர். நாம் மக்களுடன் நடமாடுகின்றோம். வேட்பாளர்களில் ஒருவர் அல்லது இருவருக்கு தொற்று ஏற்பட்டால், ஆயிரக்கணக்கானவர்களைத் தனிமைப்படுத்த வேண்டி ஏற்படும். அதன்போது, தேர்தல் அல்ல எதனையும் செய்ய முடியாமல் போகும். எனவே, நான் யோசனையொன்றை முன்வைக்கின்றேன். வர்த்தமானியை மாற்றியமைத்து 25 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்துங்கள்- என்றார்.

ஈழநாடு
Eelanadu
15.07.2020 புதன்கிழமை

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 492 7805

## இராணுவ நிழல் அரசு உருவாகிறதா?

ஆபிரிக்காவை தளமாகக் கொண்டு இயங்கிவரும் 'உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச திட்டம்' என்னும் அமைப்பு இலங்கையில் ஒரு சமாந்தரமான அரசு உருவாகிவருவதாக குற்றம் சாட்டியிருக்கின்றது. கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவரால் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டே மேற்படி அமைப்பு இவ்வாறானதொரு குற்றச்சாட்டை முன்வைத்திருக்கின்றது. இந்த அமைப்பின் தலைவரான யஸ்மின் சூக்கா, இலங்கையின் இறுதி யுத்தம் தொடர்பில் ஆராய்வதற்கென, அப்போதைய ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்ட மூவரடங்கிய நிபுணர் குழுவில் ஒருவராவார். இலங்கையில் இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்றதாக கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கெதிரான குற்றங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக வாதிட்டுவரும் சூக்கா, இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவிற்கு எதிராக கடுமையான குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தார். அமெரிக்கா சவேந்திர சில்வாவிற்கு எதிரான பயணத் தடையை விதித்தமைக்கு பின்னால் சூக்காவின் அறிக்கையும் இருந்தது.

அண்மைக்காலமாக இராணுவ ஆட்சி தொடர்பில் பல அரசியல் தரப்பினரும் பேசி வருகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் அடிக்கடி இதனை உச்சரிக்கின்றார். அதேவேளை கொழும்பு மைய சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இவ்வாறானதொரு குற்றச்சாட்டை முன்வைத்து வருகின்றனர். ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் பலரை சிவில் நிர்வாகப் பதவிகளில் அமர்த்தியமை மற்றும் பாதுகாப்புச் செயலாளரின் தலைமையில் செயலணியொன்றை உருவாக்கியமை போன்ற ஆதாரங்களை முன்வைத்தே மேற்படி குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. இவ்வாறானதொரு பின்னணியில்தான் யஸ்மின் சூக்கா இலங்கையில் சமாந்திரமான அரசு ஒன்று உருவாகிவருவதாக குற்றம்சாட்டியிருக்கின்றார். சமாந்தரமான அரசு என்றால் என்ன? ஜனநாயக ரீதியாக தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கம் ஒன்று இருக்கின்ற போதே, அதற்கு சமாந்திரமாக பிறிதொரு இராணுவ நிழல் அரசு ஒன்றும் இயங்கும்.

சூக்கா குறிப்பிடுவது போன்று அவ்வாறானதொரு அரசு உருவாகி வருகின்றது என்பதற்கு தெளிவான சான்றுகள் இதுவரையில் இல்லை. ஆனால், இவ்வாறான அறிக்கைகள் தேர்தல் காலங்களில் வெளிவருகின்ற போது, அதனை தென்பகுதி கடும்போக்குவாதிகள் தங்களின் தேர்தல் பிரசாரங்களுக்கே அதிகம் பயன்படுத்துகின்றனர். உண்மையில் இவ்வாறான அறிக்கைகள் எவரை இலக்கு வைத்து வெளியிடப்படுகின்றதோ இறுதியில், அவரையே அரசியல் ரீதியில் பலப்படுத்துகின்றது. ஜனாதிபதி தேர்தலின் போதும் இவ்வாறான சில சம்பவங்கள் இடம்பெற்றன.

தெற்காசிய பிராந்தியத்தை அமைவிடமாகக் கொண்டிருக்கும் ஒரு சிறிய நாட்டில், இராணுவ ஆட்சி ஒன்றை ஸ்தாபிக்கலாம் என்று நினைப்பது, அரசியல் ரீதியில் நிச்சயமாக முதிர்ச்சியானதொரு முடிவாக இருக்கப்போவதில்லை. உதாரணத்திற்கு, பலரும் கூறுவது போன்று அவ்வாறானதொரு ஆசை சிலரிடம் இருந்தாலும் கூட, அந்த ஆசை இறுதியில் ஆசைப்படுபவர்களுக்கே ஆபத்தைக் கொண்டுவரும். ஏனெனில் இது மிகவும் சிக்கலான பிரச்னை. ஆனால், ஜனநாயக கட்டமைப்புகளுக்குள்ளேயே ஒருவேளை இராணுவத்தின் செல்வாக்கு அதிகரிக்கலாம். அதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

# சுற்றுச்சூழலை மாசாக்குவோரை மக்கள் புறக்கணிக்க வேண்டும்

## வலி. கிழக்கு தவிசாளர் கோருகிறார்



கோப்பாய், ஜூலை 15

தேர்தல் பிரசாரத்தின்போது பொதுச் சொத்துக்களையும் சூழலையும் பாதுகாப்பதில் வேட்பாளர்கள் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும். பிரசாரம் என்ற போர்வையில் எமது பிரதேசத்தை நாமே அழித்து விடக்கூடாது என்று வலி. கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் சிலர் பொதுச் சொத்துக்களை நாசம் செய்யும் வகையிலும் சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் வகையில் செயற்படுகின்றனர். இது சட்டம் ஒழுங்கு நடவடிக்கைக்கு புறம்பான காரியமும் ஆகும்.

பொது ஸ்தாபனங்கள், மதில்களில் கண்டபடி சுவரொட்டிகளை ஒட்டுகின்றனர். பொது வீதிகளில் தமது கட்சியின் சின்னம், விருப்பு இலக்கம் போன்றவற்றை வர்ணப்பூச்சுக்களால் எழுதிவிட்டுச் செல்கின்றனர். இதனால் வீதிகளில் கடவைக்கோடுகள் உள்ளிட்ட சமிக்ஞை கோடுகள் மறைகின்றன.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு சொந்தமான எமக்குச் சொந்தமான வீதிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான வீதிகள், மாகாணத்திணைக்களத்திற்குச் சொந்தமான வீதிகள் என வேறுபாடின்றி நாசம் செய்யப்படுகின்றது.

இவ்வாறு எழுதப்பட்டவற்றை அழிக்கும் போது கூட அழிப்பதற்காக பயன்படும் வர்ணப்பூச்சு மீது எவராவது வழுக்கி விழவும் விபத்துக்கள் நடக்கவும் அதிகமாக சந்தர்ப்பங்கள் உள்ளன. வீதிகளில் எழுதுவோர் பயணிகளின் உயிருடன் விளையாடுகின்றனர். எனவே அரச சொத்துக்கு இழப்பினை ஏற்படுத்தி மக்களின் வரிப்பணத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகளை நாசம் செய்வதுடன் மட்டும் நின்றுவிடவில்லை.

வீதிகளின் பெயர்ப்பலகைகள், திட்டங்களின் பெயர்ப்பலகைகளை மறைத்து வேட்பாளர்களின் படங்களை ஒட்டுகின்றனர். இவ்வாறு நடக்கும் வேட்பாளர்களை மக்கள் புறக்கணிக்க வேண்டும் - என்றும் கூறினார்.

# தூய குழந்தை இயேசு ஆலய திருப்பலி நேற்று





மன்னார் புனித செபஸ்தியார் பேராலயப் பங்கின் துணை ஆலயமான தூய குழந்தை இயேசு ஆலயத் திருவிழாவான நேற்று செவ்வாய்க்கிழமைகாலை 6.15 மணிக்கு பள்ளிமுனை பங்குத்தந்தை அருட்தந்தை மரியதாசன் சீமான் அடிகளார் தலைமையில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருப்பலி நிறைவில் குழந்தை இயேசுவின் திருச்சொரூப ஆசீர்வாதமும் இடம்பெற்றது.

இந்தத் திருவிழா திருப்பலியில் பேராலயப் பங்குத்தந்தை அருட்பணி எஸ். ஞானப்பிரகாசம் அடிகளார், உதவிப் பங்குத் தந்தையர்களான அருட்பணி. ஜெஸ்மன்ராஜ், அருட்பணி. சதாஸ்கர், மன்னார் மடு மாதா சிறிய குருமட அதிபர் அருட்பணி. கிறிஸ்து நேசரெட்ணம், உதவி அதிபர் அருட்பணி. தயாளன் கூஞ்ஞே, வின்சென்சியன் சபைக் குருக்களும், டிலாசால் அருட் சகோதரரும், திருக்குடும்ப, பிரான்சிஸ்கன் மற்றும் யோசெவ்வாஸ் அருட் சகோதரிகளும் கலந்துகொண்டனர்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செய்திகள்

# அட்மிரலாக உயர்த்தப்பட்ட கடற்படைத் தளபதி பியால்



கொழும்பு, ஜூலை 15

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியால் டி சில்வா ஜனாதிபதியினால் நேற்று முதல் அட்மிரலாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார் என்று கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியால் டி சில்வா நேற்றுடன் ஓய்வு பெற்றுள்ளார். இந்த நிலையிலேயே அவர் அட்மிரலாகப் பதவி உயர்த்தப்பட்டுள் ளார்.

அதேவேளை,கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியால் டி சில்வா ஓய்வு பெறுவதற்கு முன்பு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்று சந்தித்துப் பிரியாவிடை பெற்றுக்கொண்டார்.

# மனைவியுடன் சேர்ந்து காணியின் உரிமையாளரை தாக்கிய அதிகாரி

வவுனியா, ஜூலை 15

வவுனியா பிரதேச செயலகத்தில் காணிப் பிணக்குகளைக் கையாளும் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் அவரது மனைவி ஆகியோர் இணைந்து காணி உரிமையாளர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் கணவனும், மனைவியும் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார், சம்பவம் தொடர்பில் பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா பிரதேச செயலகத்தின் காணிப்பிணக்குகளை கையாளுபவரும் அபிவிருத்தி உத்தியோகத்தருமான ஒருவரிடமிருந்து 1986ஆம் ஆண்டு பூவரசங்குளம், கந்தன்குளம் பகுதியிலுள்ள மூன்றரை ஏக்கர் காணியைப் பெற்றுக் கொண்ட நபர் ஒருவர், தனது மனைவியுடன் அந்தக் காணியின் பாதை விட்டுக்கொடுப்புக்கள் இடம்பெற்றுவரும் சம்பவங்களைப் பார்வையிடுவதற்காக நேற்று முன் தினம் மாலை அங்கு சென்றிருந்தார்.

இதன்போது அந்தக் காணி தொடர்பில் அபிவிருத்தி உத்தியோகத்தருக்கும் காணி உரிமையாருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டு இறுதியில் கைகலப்பாக மாறியது.

இதில் காணியின் உரிமையாளர் மற்றும் அவரது மனைவிக்கு காயம் ஏற்பட்டுள்ளதுடன் அவர்கள் இருவரும் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## கொரோனா அச்சம் காரணமாக

# சந்தேகநபர்களை நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்வது இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூலை 15

சிறைச்சாலைகளில் காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களை நீதிமன்றங்களில்முற்படுத்தும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளதாகச் சிறைச்சாலை திணைக்களம் அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று பரவல் அச்சநிலை காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

சிறைச்சாலையில் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்ட சந்தேக நபர்கள் சமூக ஊடகங்கள் ஊடான நேரலை மூலம் நீதிமன்றங்களில் முற்படுத்தப் படுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# வைத்தியசாலை மாடியிலிருந்து விழுந்த கைதி உயிரிழப்பு !

நீர்கொழும்பு சிறைச்சாலையின் கைதி ஒருவர், நீர்கொழும்பு வைத்தியசாலையின் 8ஆம் மாடியிலிருந்து வீழ்ந்து உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொரோனா வைரஸ் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட அந்தக் கைதி, பரிசோதனை முடிவுகள் வெளிவரும் முன்னர் வைத்தியசாலையிலிருந்து தப்பிச் செல்ல முற்பட்டபோது, இவ்வாறு 8ஆம் மாடியிலிருந்து வீழ்ந்து உயிரிழந்தார் என தெரிவிக்கப்படுகிறது.

போதைப்பொருள் குற்றச்சாட்டில் சிறைக் காவலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர், 36 வயதுடைய வடக்கு கதுருவான பகுதியைச் சேர்ந்தவர் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# தமிழரின் ஒட்டுமொத்தப் பலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே

## கூறுகின்றார் சித்தார்த்தன்



யாழ்ப்பாணம், ஜூலை 15

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலமே தமிழ் மக்களின் ஒட்டுமொத்தப் பலம் எனத் தெரிவித்துள்ள அந்தக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், அந்தப் பலத்தைப் பெற்றுக் கொள்வதற்கு ஏகோபித்த ஆதரவைக் கூட்டமைப்புக்கு மக்கள் வழங்க வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழர் தாயகத்தின் பல்வேறு கட்சிகளும் பல சுயேச்சைக் குழுக்களும் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றன. அவர்கள் தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடிப்பதற்கே களமிறங்கியிருக்கின்றன. தமிழ் மக்களுக்காக செயற்பட்டு வருகின்ற கட்சியாகக் கூட்டமைப்பு இருக்கின்றது. எமது கட்சி தொடர்ந்தும் மக்களுக்காகவே செயற்படும்.

ஆனால், எமது கட்சி மீது குற்றச்சாட்டுக்கள் விமர்சனங்களை முன்வைத்து அதனூடாக தமக்கான ஆதரவைப் பெறுவதற்குப் பலரும் முயற்சிக்கின்றனர். ஆனால் மக்களின் ஆணை பெற்ற கட்சியாக எமது கட்சியே இருக்கின்றது. இந்தத் தேர்தலிலும் எமது கட்சிக்கே மக்கள் தமது முழுமையான ஆதரவை வழங்குவார்கள்.

ஆகவே எம்மை மீண்டும் பலமான அமைப்பாகத் தெரிவு செய்து பாராளுமன்றம் அனுப்புவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. அதனைவிட வேறு பல கட்சிகள் போட்டியிட்டாலும் அவர்கள் பலமாக இருக்க முடியாது.

தனிப் பெரும் கட்சியாகக் கூட்டமைப்பே திகழும். ஆகையினால் மீண்டும் மீண்டும் அந்தக் கட்சிக்கே அனைத்து மக்களும் ஆதரவை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். அவ்வாறான முழுமையான ஆதரவை மக்கள் வழங்வார்கள் என்ற நம்பிக்கை எங்களிற்கு இருக்கின்றது.

ஆகையினால் நாங்கள் மீண்டும் மீண்டும் மக்களிடம் கேட்பது என்னவெனில் இங்கு பல கட்சிகள் இருந்தாலும் பலமான கட்சியாக இருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு இத் தேர்தலில் மீண்டும் ஏகோபித்த ஆதரவை வழங்கி தனிப் பெரும் கட்சியாக பலமான அமைப்பாக தெரிவு செய்ய வேண்டும். ஆக கூட்டமைப்பின் பலமே தமிழ் மக்களின் பலம் என்ற அடிப்படையில் மக்களின் ஆதரவு அமைய வேண்டும்- என்றார்.

# பேசாலையில் ஒருவர் நள்ளிரவில் கைதானார்

மன்னார், ஜூலை 15

மன்னார் - பேசாலைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் ஆயுதங்கள் புதைத்து வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்துச் சோதனை மேற்கொண்ட பொலிஸார் அந்த வீட்டின் உரிமையாளரைக் கைது செய்துள்ளனர்.

இவரை நீதிமன்றில் முற்படுத்தியபோது விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான் சந்தேகத்துக்குரிய வீட்டை காவலுக்கு உட்படுத்தவும் உத்தரவிட்டார்.

பேசாலை பகுதியில் ஒரு வீட்டில் புலிகளின் ஆயுதங்கள் புதைத்து வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்து அந்த வீட்டின் தரையை நள்ளிரவு நேரம் பொலிஸார் சோதனை செய்துள்ளனர். இது தொடர்பாக அந்தப் பகுதி மக்கள் பொலிஸாருடன் முரண்பட்டதுடன் சோதனை செய்வதற்கு நீதிமன்ற அனுமதியுள்ளதா எனவும் வினவியுள்ளனர். இதனையடுத்து இந்தச் செயற்பாட்டை கைவிட்ட பொலிஸார் வீட்டின் உரிமையாளரைக் கைது செய்துள்ளனர்.

# ஜெயவர்த்தனபுர பல்கலை பரீட்சைகள் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூலை 15

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீட இறுதிவருட மாணவர்களுக்கான பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக நிர்வாகம் இந்தத் தீர்மானத்தினை எடுத்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் - 2020
யாழ்.- கிளிநொச்சி மாவட்டம்
அரசில் இருந்தாலும் தமிழரின் இனமானத்தை விட்டுக் கொடுக்காத தலைவர்

விஜயகலா மகேஸ்வரன்
8 ✕
ஐக்கிய தேசியக் கட்சி

செய்திகள்

# அரசை மாற்றி சம்பூரை மீட்டதுபோல் அரசமைப்பை மாற்றி தீர்வு பெறுவோம்

## சம்பூர் பரப்புரையில் சம்பந்தன் திட்டவட்டம்



திருகோணமலை, ஜூலை 15

"சம்பூர் நிலங்களை மஹிந்த அரசாங்கம் அனல் மின் நிலையம் என்ற போர்வையில் கபளீகரம் செய்தபோது, எமது மக்கள் வழங்கிய ஒரு ஆணையின் அடிப்படையில் ஆட்சி மாற்றத்தை செய்ததன் மூலம் சம்பூர் மண்ணை மீட்டோம். வடக்கு, கிழக்கில் இம்முறை 20 உறுப்பினர்களை தந்தால், அரசமைப்பை மாற்றி தீர்வைப் பெற்றுத் தருவோம்",

- இவ்வாறு தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உறுதிபடத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சம்பூரில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சம்பூர் காணிகளை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மனைவியின் சகோதரருக்கு வழங்கப்பட்டு கொரிய நிறுவனம் ஒன்றிற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. அப்போது அவரால் இக்காணிகளை சுவீகரிப்பதற்காக வெளியிடப்பட்ட வர்த்தமானியை எமது மக்களின் முழுமையான ஆதரவில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மூலம் இரத்து செய்ய வைத்து இந்த சம்பூர் மண்ணை மீண்டும் இக்கிராமத்தின் பூர்விக மக்களுக்கே கையளிக்க வழி வகுத்தோம்.

மக்கள் ஒருமித்து - ஒற்றுமையாக நின்று ஓரணியில் தமது வாக்குப் பலத்தை நிரூபித்தால் எமது இனப்பிரச்னைக்கும் தீர்வு காண முடியும் இம்முறை இடம்பெறவுள்ள பாராளுமன்றத்தில் வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் 20 பாராளுமன்ற உறுப்பினர்களை வெற்றி கொள்வதன் மூலம் நாம் பலமான ஒரு சக்தியாக பாராளுமன்றத்தில் எமது மக்களின் உரிமையை பெற முடியும். அத்துடன் தடைபட்டுள்ள புதிய அரசியல் சாசனத்தையும் நிறைவேற்றி எமது உரிமையை அடைய முடியும்.

சிறிய கட்சிகளுக்கு உங்கள் வாக்குகளை அளிப்பதன் மூலம் அவர்களால் வெற்றி பெற முடியாது அவ்வாறு அழிக்கப்படும் வாக்குகள் வீணாக பயனற்றதாகவே போகும் இவ்வாறானவர்கள் அரசாங்கத்தால் திட்டமிட்டு எமது தமிழ் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்வதற்கு களமிறக்கபட்டவர்கள் எனவே உங்களுடைய வாக்கை சிந்தித்து அளிக்க வேண்டும் - என்றார்.

# நீல நிறம் எங்களுக்கு மட்டுமே ஏகபோகம் கோரும் சுதந்திர கட்சி

கொழும்பு, ஜூலை 15

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் நீல நிறத்தை வேறு கட்சிகள் பாவிப்பதை தடுப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தக் கட்சி கோரியுள்ளது.

இதுதொடர்பாக கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர தேர்தல் ஆணைக்குழுவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஆரம்பிக்கப்பட்ட தினம் முதல் கட்சியின் நிறம் நீல நிறம் என அறிவிக்கப்பட்டிருக் கின்றது. அத்துடன் கட்சியின் யாப்பு அங்கீகரிக்கப்பட்ட காலம்தொட்டு அதன் முதலாவது பந்தியில் இதுதொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது. யாப் பின் முதலாவது பந்தியில், கட்சியின் பெயர் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி என்றும் கட்சியின் தேர்தல் சின்னம் கை என்றும் கட்சியின் நிறம் நீல நிறம் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. எமது கட்சியின் யாப்பின் பிரதி ஒன்று இதற்கு முன்னர் உங்களுக்கு அனுப்பியுள்ளோம்.

என்றாலும் இடம்பெறும் தேர்தல் பிரசாரங்களில், வேறு சில அரசியல் கட்சிகளினால், தமது கட்சியின் நிறம், நீல நிறம் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அண்மையில் (இந்த தேர்தலில்) உருவாக்கப்பட்ட அரசியல் கட்சி நீல நிறத்தை பாவிப்பதாக தேர்தல் மேடைகளில் அறிவித்திருக்கின்றது. இது தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடகங்கள் ஊடாக பிரசாரமாகி இருந்தது.

இந்த நடவடிக்கையானது சிறிலங்கா சுதந்திர கட்சியின் நீண்டகால அடையாளத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விடயமாகும். அதனால் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் நிறமான நீல நிறத்தை வேறு அரசியல் கட்சியினால் பயன்படுத்துவதை தடைசெய்வதற்கோ அல்லது தடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று கேட்டுள்ளார்.



# கஞ்சா கைமாற்றப்பட்டபோது மதுவரித் திணைக்களம் அதிரடி

## சாவகச்சேரியில் இருவர் கைது

இருபது கிலோ கஞ்சாவைக் கைமாற்றியபோது இருவரை மதுவரித் திணைக்களத்தினர் நேற்று முன்தினம் இரவு கைது செய்தனர்.

தென்மராட்சி, சாவகச்சேரி நகரில் வைத்தே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்துக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று தெரிய வருகின்றது.

கைதானவர்களில் ஒருவர் சாவகச்சேரியைச் சேர்ந்தவர் என்றும் மற்றையவர் திருகோணமலையைச் சேர்ந்தவர் என்றும் கூறப்படுகின்றது.

கைதானவர்களை சாவகச்சேரி நீதிமன்றில் முன்னிலைப் படுத்த நடவடிக்கை எடுக்கப் படுகின்றது.

# கூட்டமைப்பு திசை மாறாது பயணிக்க புலிகளின் போராளிகள் சேர வேண்டும்

## பங்காளிக் கட்சித் தலைவர் செல்வம் அழைப்பு

மன்னார், ஜூலை 15

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேறு திசையில் செல்லாமல் இருப்பதற்கும் ஆயுதம் ஏந்திய போராளிகள் ஜனநாயக நீரோட்டத்திற்கு வர வேண்டும் என்பதே எமது பிரதான நோக்கம். இதற்காக தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்று கூறியுள்ளார் அக்கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட வேட்பாளருமான செல்வம் அடைக்கலநாதன்.

நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் மன்னாரில் அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேசத்துக்காகவும் - மக்களுக்காகவும் - மண்ணுக்காகவும் விடுதலைப் போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்த போராளிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஓர் அங்கமாக - ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும். இதற்காக எமது தமிழீழ விடுதலை இயக்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தேசியத்தோடு - இன உணர்வோடு இருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளில் இருந்தவர்களால் உருவாக்கப்பட்ட கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு ஒரு நிர்வாக கட்டமைப்பு கொண்ட அமைப்பாக செயல்பட முன்வரவேண்டும். அந்த அடிப்படையில் நாங்கள் ஓர் முயற்சியை மேற்கொண்டு வருகின்றோம்.

அவ்வாறு விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்ட இயக்கங்களை நாங்கள் இணைக்கின்ற ஒரு முயற்சியை அடுத்த வாரம் மேற்கொள்ளவுள்ளோம். ஏற்கனவே கூட்டமைப்பில் நாங்கள் (ரெலோ), புளொட் அமைப்புகள் இருக்கிறோம். ஏனையவர்களை ஒன்று சேர்த்து ஓர் அமைப்பாக கூட்டமைப்பில் நாம் செயற்பட முடிவெடுத்துள்ளோம். இனி வரும் காலத்தில் ஏனையவர்களையும் இணைத்து எமது மக்களுடன் பயணிக்கவுள்ளோம் - என்றார்.

# தனது வெற்றியே தமிழரின் வெற்றியாம் கூட்டமைப்பு வென்றால் அது தோல்வியாம்

இப்படிக் கோஷமிடுகிறார் அங்கஜன்

யாழ்ப்பாணம், ஜூலை 15

அங்கஜன் இராமநாதன் வென்றால் மக்கள்வென்றதிற்கு சமன்; தர்மம் வென்றதற்கு சமன். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வென்றால் மக்கள் தோற்றதற்கு சமன்; மக்கள் ஏமாந்ததற்குச் சமன்.

- இப்படி கோஷமிட்டுள்ளார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் அங்கஜன் இராமநாதன்.

யாழ்ப்பாணம் - மண்டைதீவில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவரான த.சித்தார்த்தன், "அங்கஜன் இராமநாதன் தீவிர பிரசாரங்களை மேற்கொள்கிறார். அவர் வென்றால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வென்றதற்கு சமன்" என்று குறிப்பிட்டார். ஆனால், நான் ஒரு விடயத்தை ஆணித்தரமாக கூறிகொள்கிறேன்.

அங்கஜன் இராமநாதன் வென்றால் மக்கள் வென்றதற்கு சமன்; தர்மம் வென்றதற்கு சமன். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வென்றால் மக்கள் தோற்றதற்கு சமன்; மக்கள் ஏமாந்ததற்குச் சமன்.

25 வருடங்கள் ஏமாற்றியது போதாதென்று இன்னும் ஏமாற்றும் தந்திரத்தை ஆரம்பித்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றும் அவர் இதன்போது சாடியிருந்தார்.

செய்திகள்

# அரசியலில் பெண்கள் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கவேண்டும்

## கபே அமைப்பு கோரிக்கை

கொழும்பு, ஜூலை 15

அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது ஒவ்வொரு பெண்ணினதும் பொறுப்பு என கபே அமைப்பின் பணிப்பாளர் சுரங்கி ஆரியவன்ஸ தெரிவித்துள்ளார்.

தேர்தல் செயற்பாட்டில் பெண்களின் பங்களிப்பு தொடர்பான பயிற்சிப்பட்டறையில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இம்முறை வேட்பாளர் பட்டியல்களைத் தயாரித்த போது அனைத்து அரசியல் கட்சிகளும் பெண்களின் பிரதிநிதித்துவத்திற்கு குறிப்பிடத்தக்களவு வாய்ப்பை வழங்கவில்லை.

இதன் விளைவாக, இத்தேர்தலில் 7458 வேட்பாளர்களில், 819 பேர் மட்டுமே பெண்கள்.

பெண்கள் மீது எந்தளவு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அக்கறை கொண்டுள்ளனர் என்பதை இந்த விடயம் வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது.

நாட்டின் அனைத்து பிரதான அரசியல் கட்சிகளின் முடிவெடுக்கும் அதிகாரம் ஆண்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. இதன் காரணமாக தற்போதைய அரசியல் அரங்கில் பெண்களுக்கு பொருத்தமான இடம் வழங்கப்படவில்லை.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுக்களைத் தயாரித்தபோது அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களிடமும் பகிரங்கமாக இது தொடர்பாக வேண்டுகோள் விடுத்தோம். எனினும், அந்தக் கோரிக்கைகளை கருத்திற்கொள்ளவில்லை என்பது வேட்பாளர்களின் இறுதிப் பட்டியலிலிருந்து தெளிவாகிறது.

எனவே, தற்போது போட்டியிடும் 819 பெண் வேட்பாளர்களில் கணிசமான எண்ணிக்கையைத் தேர்ந்தெடுப்பது இலங்கையில் பெரும்பான்மையான வாக்காளர்களாக காணப்படும் பெண்களின் பொறுப்பாகும். வேட்பாளர் பட்டியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்திற்கு குறிப்பிடத்தக்க இடம் வழங்கப்படவில்லை என்றாலும், வாய்ப்பளிக்கப்பட்ட பெண்களை நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுப்பதில் குறிப்பாக பெண் வாக்காளர்கள் கவனம் செலுத்த வேண்டும்-என்றார்.

## கொரோனா தொற்று அபாயம்

# தனியார் வைத்தியசாலை தற்காலிகமாக மூடப்பட்டது

கொழும்பு, ஜூலை 15

கம்பஹா - ராகமவில் அமைந்துள்ள ஒரு தனியார் வைத்தியசாலையை தற்காலிகமாக மூட சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்று உறுதியான ஒருவர் அடையாளம் காணப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாதிக்கப்பட்ட நோயாளியுடன் தொடர்பு கொண்ட பிற ஊழியர்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

# ஹோமாகமவில் ஏழு குடும்பங்கள் தனிமைப்படுத்தல்

ஹோமாஹம பகுதியில் ஏழு குடும்பங்களைச் சேர்ந்த 30பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டவர்களில் வைத்தியர் மற்றும் மருத்துவ நிலையமொன்றின் உரிமையாளர் ஒருவரும் காணப்படுகின்றனர் என அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

அதாவது கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தைச் சேர்ந்த இரு இராணுவத்தினருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஹோமாகவிலுள்ள அந்த இராணுவத்தினரின் உறவினர்களே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் வடக்கில் இராணுவக் கெடுபிடி!

## விஜயகலா மகேஸ்வரன் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், ஜூலை 15

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் வடக்கில் இராணுவக் கெடுபிடி அதிகரித்து வருகிறது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சண்டிலிப்பாயில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த வருடம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்த பின்னர் வடக்கு - கிழக்கில் இராணுவ மயமாக்கல் அதிகரித்து வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குச் செல்வதாக இருந்தால் சுமார் 10 இடங்களில் பொதுமக்கள் சோதனைச் சாவடிகளில் இறக்கிச் சோதனை செய்யப்பட்ட பின்னரே பயணிக்க அனுமதிக்கப்படுகின்றார்கள். அதேபோல் முன்னாள் போராளிகளின் வீடுகளுக்குப் புலனாய்வாளர்கள் சென்று அச்சுறுத்தும் நிலைமை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

சில வேட்பாளர்கள்கூட இராணுவப் புலனாய்வாளர்களால் அச்சுறுத்தப்படுகின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகள் எமது மக்களை மீண்டும் பீதிக்குள்ளாக்கும் செயலாக அமைகின்றது. எனவே நாம் மீண்டும் சுதந்திரமாக வாழ்வதற்கு ஐக்கிய தேசிய கட்சி அரசை நாம் ஆதரித்து வெற்றியடையச் செய்யவேண்டும்.

நல்லாட்சி அரசில் மக்கள் சுதந்திரமாக நடமாடக்கூடிய சூழ்நிலை காணப்பட்டது. மக்கள் எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிபீடம் ஏற ஒத்துழைப்பார்களேயானால் மக்கள் சுதந்திரமாக நடமாடக்கூடிய சூழ்நிலை மீண்டும் உருவாகும் - என்றார்.

# வடக்கு மாகாணத்துக்கு தனியான பொருளாதார கொள்கை அவசியம்

## ஈ.பி.டி.பி வேட்பாளர் விக்னேஸ் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 15

வடக்குக்கு என்று தனியான பொருளாதாரக் கொள்கை வகுக்கப்படவேண்டும் என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் குலரட்ணம் விக்னேஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், தமிழர்களின் அபிலாஷைகளை தீர்க்கக்கூடிய வகையில் ஏனைய இனங்களுக்கு கிடைக்கின்ற அதே கௌரவமும் அதே சமனான நீதியும் கிடைக்கக்கூடிய வகையில் அரசியல் உரிமைகளை பெற்றுக்கொடுப்பதே எனது - என் கட்சியின் தீர்மானமாகும்.




க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளின் முடிவுகள் என்னுடைய அவதானிப்பில் கல்வி வீழ்ச்சிக்கு முக்கியமான காரணங்களில் ஒன்று வட பகுதியின் பொருளாதாரப் பின்னடைவே. முக்கியமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சியின்மையே ஆகும்.

ஆகவே, எங்கள் உழைப்பினூடாக பிரதேசத்திலே தன்னிறைவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதே என்னுடைய திட்டமாகும். இதனை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

எனவே இவ்வாறான விடயங்களை உள்ளடக்கியதாக முதலில் ஓர் தொழிற்துறை அபிவிருத்தி மாற்றும் பொருளாதார வளர்ச்சியை எமது வடபகுதி காண வேண்டுமென்றால் உண்மையில் வடபகுதிக்கென பொருளாதாரக் கொள்கை ஒன்றை வகுக்கவேண்டும் -என்றார்.

# தமிழர்கள் அரசை ஆதரிக்க வேண்டும்

## இனவாதி விமலுக்கும் ஆதரவு கேட்கிறார் முரளி

கொழும்பு, ஜூலை 15

தமிழ் மக்கள் அனைவரும் எதிர்வரும் பொதுத்தேர்தலை தங்களுக்கானதொரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் கொழும்பு வேட்பாளர் விமல் வீரவன்சவுக்கு ஆதரவு தெரிவித்து முத்தையா முரளிதரனால் தமிழ் வர்த்தகர்களுடன் சந்திப்பு நிகழ்ந்தது.

இந்த நிகழ்விலேயே முத்தையா முரளிதரன் இதனைத் தெரிவித்தார்.

மேலும், இன, மத பேதமின்றி அனை வருக்கும் சிறந்த சேவைகளை நாம் வழங்கி வருகின்றோம் அரசியல்வாதிகள் மக்களுக்கு உதவுவார்கள் என ஒவ்வொரு காலமும் எதிர்பார்த்து ஏமாந்து வருகின்றோம்.

நான் எதனையும் எதிர்பார்த்து உதவிகளைச் செய்வதில்லை. அதனை எவருக்கும் தெரியப்படுத்துவதும் இல்லை.

வடக்குக்கான ஆளுநர் பதவி எனக்கு கிடைத்தபோது அதனை வேண்டாமென மறுத்தேன். எனக்கு அரசியலுக்கு வருவதற்கு விருப்பமில்லை. அதனால் தான் எனது தம்பியைக் களமிறக்கியுள்ளோம்.



அவரின் ஊடாக, மக்களுக்கான சேவையைத் தொடர்ந்து செய்துகொண்டே இருப்பேன். தற்போதைய அரசின் ஆட்சிதான் தொடர்ந்து நிலவ இருக்கின்றது. ஆகவே, தமிழ் மக்கள், அரசின் பங்காளியாக மாற வேண்டும் - என்றார்.

# யாழ். பல்கலைக்கழக மாணவியர் இருவருக்கும் கொரோனா இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 15

கொரோனா சந்தேகத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகம் மற்றும் கைதடி சித்த மருத்துவ பீட மாணவியர்களுக்கு கொரோனா தொற்று இல்லை என்று சோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டது.

இந்தத் தகவலை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் நேற்று ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்தார்.

கிளிநொச்சி வளாகத்தில் கம்பஹாவைச் சேர்ந்த மாணவியின் சகோதரன் கொரோனா தொற்றுக்கு இலக்காகியிருந்தார். இதையடுத்து, கிளிநொச்சி வளாகத்தின் விடுதியில் தங்கியிருந்து கல்வி பயிலும் குறித்த மாணவிக்கும் கொரோனா தொற்றியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் தனிமைப்படுத்தப்பட்டு, அவரின் இரத்த மாதிரி பரிசோதனைக்காக எடுக்கப்பட்டது.

இதேபோன்று பொலநறுவையிலிருந்து யாழ்.சித்த மருத்துவ பீடத்திற்கு கற்பதற்காக வந்து காய்ச்சல் காரணமாக அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட மாணவியிடமும் கொரோனா தொட்பான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

பரிசோதனை முடிவில் இரு மாணவியருக்கும் கொரோனா தொற்று இல்லை என்று உறுதியானதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கூறினார்.

# பஸ்ஸிலிருந்து இறங்கும்போது தவறிவீழ்ந்த முதியவர் மரணம்

பேருந்தில் இருந்து இறங்க முற்பட்டபோது கீழே விழுந்து காயமடைந்த முதியவர் சிகிச்சை பலனின்றி நேற்று செவ்வாய்க்கிழமை மரணமானார்.

வவுனியா - நெடுங்கேணி மதியாமடு பிரதேசத்தைச் சேர்ந்த கோபால் (வயது 71) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த முதியவர் வவுனியாவிலிருந்து பேருந்தில் நெடுங்கேணிக்கு திரும்பியிருந்தார். தரிப்பிடத்தில் பேருந்து நின்றபோது கீழே இறங்க முற்பட்டவர், தடுமாறி கீழே விழுந்து தலையில் பலத்த காயமடைந்தார்.

உடனடியாக வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவருக்கு தொடர்ச்சியாக சிகிச்சை அளிக்கப்பட்டது. எனினும் அது பலனின்றி நேற்று அவர் மரணமானார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நெடுங்கேணி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மத்திய வங்கி பிணைமுறி மோசடி 7 பேரிடம் வாக்குமூலம் பெற முடிவு

கொழும்பு, ஜூலை 15

2016 ஆம் ஆண்டு மத்திய வங்கி முறிகள் மோசடியில் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களிடம் விசாரணை செய்து வாக்கு மூலங்களை பதிவு செய்ய சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா உத்தரவிட்டுள்ளார்.

அந்தவகையில் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, அர்ஜுன் அலோசியஸ் உட்பட 7 பேரிடம் வாக்குமூலம் பெறுவதற்கு சட்டமா அதிபர் பதில் பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

அத்தோடு அவ்வாறு பதிவு செய்யப்பட்ட அறிக்கைகளை ஜூலை 25க்கு முன் சமர்ப்பிக்குமாறும் அறிவுறுத்தியுள்ளார் என சட்டமா அதிபர் திணைக்களம் நேற்று செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளது.


இந்த மாத ஆரம்பத்தில், மத்திய வங்கி மோசடி தொடர்பாக ரவி கருணநாயக்க உட்பட 7 பேரை கைது செய்வதற்காக கொழும்பு



கோட்டை நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்த பிடியாணை உத்தரவை செயற்படுத்துவதை நிறுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்தது.

குறித்த மோசடி குறித்த சட்டமா அதிபர் வழங்கிய சமர்ப்பணங்களை ஆராய்ந்த கோட்டை நீதவான் நீதிமன்றம் ரவி கருணாநாயக்க உட்பட 10 சந்தேகநபர்களுக்கு எதிராக கடந்த மார்ச் மாதம் பிடியாணை உத்தரவை பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.






இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.07.2020 அன்று வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருதி கோகிலா மகேந்திரன்




7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : காலைக்கதிரொளி
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பெண் பூவே

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
ஸ்வாதி மற்றும் சப்தகிரி நடிப்பில்
திரிபுரா
அஜித், திரிஷா மற்றும் அனுஸ்கா நடிப்பில்
என்னை அறிந்தால்



திரைப்படத்திலிருந்து காட்சிகள்
4.30 மணி : இப்படியும் பாடலாம்
5.00 மணி : அந்த நாலு பேர்
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : கதை நேரம்

**இரவு**
7.00 மணி : கொஃபி வித் பிரமுகர்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்




10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி மற்றும் செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**
7.00 மணி : ஓய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - கணிதம்
6.00 மணி : தரம் 07 - கணிதம்
6.45 மணி : தரம் 08 - விஞ்ஞானம்
7.30 மணி : தரம் 09 - விஞ்ஞானம்
8.15 மணி : தரம் 10 - தமிழ்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
அரசியல் விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
கணக்கீடு
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு)
இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 09 - கணிதம்
2.00 மணி : தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் தமிழ்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் வர்த்தகம்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் வரலாறு

**இரவு**
7.00 மணி : க.பொ.த உயர்தரம் கலைப்பிரிவு
மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி :அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா - 01
10.00 மணி : புதியதோர் தொடக்கம்
10.30 மணி : பஜனை
11.00 மணி :பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி :திருவிழா - 02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :அருளுரை
7.30 மணி : திருவாசகம்
08.00 மணி :திருவிழா - 01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடலகள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித சூசையப்பர் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்

**பகல்**
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்